කියවූ ම නිමිතම ඇවිරිණි]
முழு பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ZONAL EDUCATION OFFICE SAMMANTHURAI வலயக் கல்வி அலுவலகம் சம்மாந்துறை කලාප අධ්‍යාපන කාර්යාලය සම්මන්තුරේ ZONAL EDUCATION OFFICE SAMMANTHURAI

කලාප අධ්‍යාපන කාර්යාලය, සම්මන්තුරේ
வலயக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
Zonal Education Office, Sammanthurai

5

DIAGNOSTIC TEST FOR GRADE FIVE STUDENTS FOR ASSESSING THE STUDENTS' LEARNING ABILITIES - 2024
மாணவர்கள் கற்கும் திறனை மதிப்பீடு செய்வதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும்
ஆய்ந்தறி மதிப்பீடு - 2024

2

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
- முன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டதத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகள் உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

[பக் 2 ஐப் பார்க்க

www.ikedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

பிரிவு 1&2

76667-4945

தரம் 01
தொடக்கம்

ஆரம்பம்: **தரம் 11** வரை



2025

Grade 1 - 11	Grade 6 - 8
தமிழ் மீடியம்	English Medium

COMMERCIAL BANK	BOC	PEOPLE'S BANK	eZ Cash
Easy to Learn (Pvt) Ltd Wellawatte 8008392295	S.Kishokumar Nelliyaddy Branch 86479603	S.Kishokumar Jaffna University 162-2-001-7-0028670	0766674945

LEARN EASY
KNOWLEDGE IS POWER

Call for Info
76667-4945

zoom
ONLINE TUITION

2025

English Medium

Grade 6 to Grade 8

Maths
Science
Health
Geo
Civics
English
ICT
Spoken English
History
Tamil
Sinhala

Monthly **3,000/-**
for all 11 subjects

COMMERCIAL BANK	BOC	PEOPLE'S BANK	eZ Cash
Easy to Learn (Pvt) Ltd Wellawatte 8008392295	S.Kishokumar Nelliyaddy Branch 86479603	S.Kishokumar Jaffna University 162-2-001-7-0028670	0766674945

LEARN EASY
KNOWLEDGE IS POWER

அழையுங்கள் :
76667-4945

zoom
எப்பாத்திலிருந்தும்
இணையலாம்



தரம் 1
தொடக்கம்

தரம் 5
வரை

- பாடத் தெரிவுகள் செய்ய முடியாது.
- சகல பாடங்களுக்குமான மாதக்கட்டணம்
- அனைத்து பாடங்களுக்குமான recording வழங்கப்படும்.

நுண்ணறிவு
வினாத்தாள்
(பகுதி 1, பகுதி 2)
Spoken English

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்

புதிய கல்வியாண்டு
2025

zoom

76667-4945

LEARN EASY
KNOWLEDGE IS POWER




தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
தமிழ் இலக்கிய நயம்
English Literature
ICT

தரம் 6
தொடக்கம்


தரம் 11
வரை


1. பின்வரும் உருவை அவதானிக்க, அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) மாகாண எல்லைகள் பிரிக்கப்பட்ட இலங்கை தேசப்படம் காணப்படுகின்றது
(2) பதின்மூன்று இருக்கைகளும் பன்னிரண்டு மாணவர்களும் காணப்படுகின்றனர்.
(3) இந்த வகுப்பறையில் பரீட்சை நடைபெறுகின்றது.

2. பின்வரும் உருவில் A எனவும் B எனவும் குறிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு முறையே பொருத்தமான இரு உருப் பகுதிகளும் யாவை?



(1) 
(2) 
(3) 

3. கீழே உள்ள A, B, C, D, E ஆகிய உருக்களில் ஒத்த இரண்டு உருக்களும் யாவை?




(1) C உம் A உம் (2) A உம் E உம் (3) D உம் B உம்

4. கீழே உள்ள பந்தியின் வெற்றிடங்களில் இடம் பெறுவதற்கு பொருத்தமான சொற்கூட்டத்தைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
கோழிக் குஞ்சுகளைக் கண்ட ..... சத்தமாகக் கரையத் தொடங்கின. கோழிக் குஞ்சை..... செல்ல வந்த காகத்தைத் தாய்க்கோழி புலி போல ..... தடுத்தது.

(1) காகங்களின், அருகில், பறந்து
(2) காகங்கள், தூக்கிச், பாய்ந்து
(3) காகம், தாக்கிச், விரைந்து

5. வெற்று அடைப்புகளுக்குப் மிகப்பொருத்தமான வடிவங்களை தெரிவு செய்க.





(1)

(2)

(3)

சுட்டெண் : .....

6. பின்வரும் ஆறு உருச் சட்டங்களில் ஒரு நிகழ்வின் ஆறு சந்தர்ப்பங்கள் காட்டப்பட்டுள்ளன.



A B C D E F

அச்சந்தர்ப்பங்களின் அர்த்தமுள்ள ஒழுங்குமுறை யாது?


(1) **EBCADF** (2) **BCADFE** (3) **CEADFB**

7. உமைர் உட்பட பதினைந்து மாணவர்கள் வட்டமாக அமர்ந்திருந்தனர். உமைரிலிருந்து சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, வெள்ளை, கறுப்பு ஆகிய நிறங்களை முறையே மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கூறிக்கொண்டிருந்தனர். முதற்சுற்றில் சிவப்பு எனக்கூறிய உமைர் அடுத்தும் சிவப்பு நிறத்தை கூறுவது எத்தனையாவது சுற்றாக அமையும்.

(1) 3 (2) 6 (3) 8

8. பின்வரும் நிழல் உருவத்தை அவதானித்து **A** தொடக்கம் **D** வரையான நேரத்தைக் காட்டும் சரியான ஒழுங்கை தெரிவு செய்க.





(1) பி.ப. 2.30, மு.ப. 8.00, பி.ப. 6.00, மு.ப. 10.00


(2) மு.ப. 8.00, பி.ப. 2.30, பி.ப. 6.00, மு.ப. 10.00

(3) மு.ப. 2.30, பி.ப. 8.00, மு.ப. 6.00, பி.ப. 10.00

9. 1 - நாம் எதிர்பார்த்ததை விடக் கண்காட்சி சிறப்பாக நடந்து முடிந்தது!
2 - எவ்வளவு பெரிய மலை!
3 - உற்பத்திப் பொருட்கள் இன்மையால் தொழிற்சாலை மூடப்பட்டுவிடுமோ!
4 - ஆயிரக்கணக்காண வீடுகள் சூறாவளியால் தரைமட்டமாகிவிட்டன!
5 - அவன் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகிவிட்டது!

மேலே தரப்பட்டுள்ள 1 தொடக்கம் 5 வரையான வாக்கியத்தின் உணர்ச்சிகளை முறையே வெளிப்படுத்துவது

(1) இரக்கம், வியப்பு, மகிழ்ச்சி, அதிர்ச்சி, அச்சம்,
(2) மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், இரக்கம், அதிர்ச்சி
(3) வியப்பு, இரக்கம், மகிழ்ச்சி, அதிர்ச்சி, இரக்கம்,

10.  எனின்  = ? ஆவதற்கு

வினாக்குறி உள்ள இடத்திற்குப் பொருத்தமான உரு யாது?


(1) 

(2) 

(3) 

[பக் 4 ஐப் பார்க்க

11. பின்வரும் நெய்யரியையும் அதில் செல்வதற்காகத் தரப்பட்டுள்ள குறிகளையும் பார்க்க.



↑ வடக்குத் திசையில் திரும்புக.

→ கிழக்குத் திசையில் திரும்புக.

↓ தெற்குத் திசையில் திரும்புக.

← மேற்குத் திசையில் திரும்புக.

↳ இடப்பக்கம் திரும்புக.

↵ வலப்பக்கம் திரும்புக.

() ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் தூரத்திற்கு முன்னோக்கிச் செல்க

X நிறுத்துக.

மேற்குறித்த குறிகளுக்கு ஏற்பப் பின்வரும் இடம் Z இலிருந்து ஆரம்பித்து

↓ () ↳ () () () ↵ () → () ↑ () () X என்னும் குறிகளுக்கு ஏற்ப செல்லும் ஒருவர் சென்று முடிக்கும் இடத்திற்கும் ஆரம்பித்த இடத்திற்கும் இடையில் ஓர் அடைப்பின் எத்தனை பக்கத்தூர இடைவெளி காணப்படுகின்றது.

(1) 5 (2) 4 (3) 6


12. கீழே மூன்று அட்டைத் தாள்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் அளவுகளில் மாற்றம் ஏற்படாத வகையில் அவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட உருளையின் உருவம் காட்டும் விடையைத் தெரிவுசெய்க




சுற்றிவர உள்ள அளவு 6cm




சுற்றிவர உள்ள அளவு 6cm






(1)




(2)



(3)

13.



அம்புக்குறி காட்டும் பிள்ளையிலிருந்து இடஞ்சுழியாக ஒன்று, இரண்டு, மூன்று என்றவாறு எண்ணி 'மூன்று' எனக் கூறப்படும் நபர் நீக்கப்படுகின்றார். அடுத்த நபரிலிருந்து தொடங்கி ஒன்று , இரண்டு, மூன்று என்றவாறு எண்ணி 'மூன்று' எனக்கூறப்படும் நபர் நீக்கப்படுகின்றார். இவ்வாறு இரு நபர்கள் மாத்திரம் எஞ்சியிருகும் வரைக்கும் இச்செயன்முறை தொடர்ந்து செய்யப்படுகின்றது. அப்போது இறுதியாக எஞ்சியிருக்கும் நபர்களின் எழுத்துக்கள் எவை?

(1) C, D (2) A, F (3) B, D

14. பரீட்சையொன்றில் 4 மாணவர்கள் பெற்ற புள்ளிகளுக்கிடையிலான வித்தியாசம் அருகில் தரப்பட்டுள்ளது. இந்த நால்வரில் அதிகமான புள்ளிகளைப் பெற்றவன் கமலன் ஆகும். அவனது புள்ளி 90 எனின் நிமலனின் புள்ளிகள் எத்தனை?







(1) 78 (2) 77 (3) 79

	அம்மன்	
4	நிமலன்	
.....	1	இல்மன்
9	.....	12 கமலன்

[பக் 5 ஐப் பார்க்க

www.ikedu.lk

15. பின்வரும் உருக் கோலத்தில் ? உள்ள இடத்தில் வரவேண்டிய உரு யாது?









(1) (2) (3)

16. நீர்வீழ்ச்சிகள், உள்ளத்தில் மகிழ்ச்சியை எழச்செய்வதனால், இதை 'வீழ்ச்சி' என்று சொல்வதை விட 'எழுச்சி' என்றே கூறலாம். அந்த வகையில் இலங்கையின் பேக்கர்ஸ் நீர்வீழ்ச்சியும் **(Bakers Falls)** ஒன்றாகும். ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவில் இந்த நீர்வீழ்ச்சி அமையப் பெற்றுள்ளது. இது சுமார் 20மீற்றர் உயரம் உடையதாகும். பிரபல பிரித்தானிய ஆய்வுப் பயணியான சேர் சமுவெல் பேக்கர் என்பவரின் பெயர் இந்த நீர்வீழ்ச்சிக்கு சூட்டப்பட்டுள்ளது. பசுமையான புல்வெளிகளுக்கு மத்தியில் அழகு தோற்றத்துடன் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது." மேலே தரப்பட்டுள்ள கூற்றானது குறித்த நீர்வீழ்ச்சியின் காட்சியுடன் கற்புலசெவிப்புல சாதனங்களின் ஊடாக விளம்பரப்படுத்தப்பட்டது.
இது எவர்களை மையப்படுத்தி வெளியிடப்பட்டிருக்கும்?

(1) கல்வி கற்கும் மாணவர்களுக்காக
(2) நீர்வீழ்ச்சிகளைப் பற்றி அறிபவர்களுக்காக
(3) சுற்றுலாப் பயணிகளுக்காக

17. உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



(1) 15 (2) 05 (3) 18

18. பாடசாலை ஒனறில் காலைக்கூட்டத்தின்போது மாணவர்கள் சம அளவு தூரத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். ஒரு வரிசையில் 20 மாணவர்கள் இருக்கின்றனர். அதேபோன்று ஒவ்வொரு வரிசையிலும் 20 மாணவர்கள் இருக்கின்றனர். வரிசையில் முதலாவது மாணவன் இருக்கும் இடத்திலிருந்து எட்டாவதாக இருக்கும் மாணவர் இருக்குமிடத்திற்கான தூரம் **3m 50cm** ஆகும். எனின் அந்த வரிசையின் மொத்த நீளம் யாது?

(1) 10 m (2) 9m 50cm (3) 10m 50cm

19. அமலின் கைக்கடிகாரம் 15 நிமிடங்கள் பிந்திய நேரத்தைக் காட்டியது. இதற்கேற்ப தமது வீட்டிலிருந்து முற்பகல் 8.55 இற்கு தபாலகத்திற்கு அமல் சென்றான். அங்கு சரியான நேரத்தைக் காட்டும் தபாலகத்தின் கடிகாரம் நேரம் சரியாக முற்பகல் 9.15 ஐக் காட்டியது. இதற்கேற்ப அவன் வீட்டிலிருந்து தபாலகத்துக்குச் செல்வதற்கு எடுத்த நேரம் யாது ?


(1) 5 நிமிடங்கள் (2) 15 நிமிடங்கள் (3) 20 நிமிடங்கள்

20. சரன் குறித்த எண்ணை நினைத்தான். அவ்வெண்ணுடன் நான்கைக் கூட்டி வருகின்ற விடையை நான்கால் பெருக்கிய போது பெறப்படும் விடையானது 50 ல் இருந்து 2 ஐக் கழித்து வரும் விடைக்குச் சமன். எனின் சரன் ஆரம்பத்தில் நினைத்த எண் யாது?


(1) 48 (2) 16 (3) 8

[பக் 6 ஐப் பார்க்க


www.lkedu.lk



21. சதுர வடிவமுள்ள ஒரு கடதாசி முறிந்த கோடு வழியே மடிக்கப்பட்டுள்ள விதம் A, B, C ஆகிய உருக்களில் காட்டப்பட்டுள்ளது. உரு C இற் காட்டப்பட்டுள்ளவாறு மூன்று இடங்களிலிருந்து சிறிய பகுதியை வெட்டி அகற்றிக் கடதாசியை முற்றாக விரிக்கும்போது கிடைப்பது யாது?



(1) (2) (3)



22. சூரிய உதயத்தின் போது A, B. C, D எனும் நால்வர் ஒரு நிரையில் நிற்கின்றனர். இதில் A சூரிய உதயத்தைப் பார்த்தவாறு நிற்கின்றார். A இன் வலக்கைப் பக்கத்தில் B இன் வலக்கைப் பக்கமும் B இன் இடக்கைப் பக்கத்தில் C இன் இடக்கைப் பக்கமும் C இன் வலக்கைப் பக்கத்தில் D இன் வலக்கைப் பக்கமும் நிற்குமாறு உள்ளனர். கிழக்கு நோக்கி நிற்கும் மற்றவர் யார்?

(1) A (2) B (3) C


23. கடையொன்றில் நான்கு வெற்றுப் பால்மாப் பைக்கற்றுக்களை வழங்கினால் ஒரு பால்மாப் பைக்கற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். எனின் 31 வெற்றுப் பால்மா பைக்கற்றுக்களை வைத்திருக்கும் மின்ஹா பெற்றுக்கொள்ளக்கூடிய பால்மாப் பைக்கற்றுக்களின் அதிகூடிய எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 9 (3) 7

24. சதுரங்களையும் வட்டங்களையும் கொண்டு வரையப்பட்டுள்ள ஓர் உரு தரப்பட்டுள்ளது. பின்வரும் எந்த விடை அவ்வுருவுடன் பொருத்தமற்று இருக்கின்றது.

(1) பிராணிகள், மிருகம், பசு
(2) தாவரங்கள், மரங்கள், கொடிகள்
(3) வலயம், கோட்டம், பாடசாலை



25. 

அருகில் தரப்பட்டுள்ள கொள்ளளவுகளுக்கு அமைவாக பெரிய பாத்திரத்தை நிரப்புவதற்கு சிறிய பாத்திரம் எத்தனை தடவைகள் பயன்படுத்த வேண்டும்.

(1) 2 (2) 4 (3) 6

26. ஒரு பணப்பையில் குற்றிகளும் நாணயத் தாள்களுமாக 10 உள்ளன. அவற்றின் பெறுமானங்கள் ரூ.10, ரூ.20, ரூ.50, ரூ.100 ஆகும். ரூ.10 நாணயக் குற்றிகளின் எண்ணிக்கையும் ரூ.100 நாணயத்தாளின் எண்ணிக்கை மட்டும் சமம். பணப்பையில் இருக்கத்தக்க மிகக்குறைவான பணத்தொகை யாது?

(1) ரூ.170 (2) ரூ.300 (3) ரூ.330

[பக் 7 ஐப் பார்க்க


www.ikeedu.lk

27. எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



(1) 7 (2) 25 (3) 24

28. முதலாவதாகத் தரப்பட்டுள்ள வடிவத்திற்குச் சமனாக அமையாத வடிவத்தை தெரிவு செய்க




(1) (2) (3)

29. ஒரு வியாபாரி தன்னிடம் மிஞ்சியுள்ள 10 கிலோகிராம் அரிசியினை ஒவ்வொரு கிலோகிராமாக மாத்திரம் விற்பனை செய்கின்றான். இவ்வாறு ஒவ்வொரு கிலோகிராமாக அவன் நிறுக்கின்றபோது 10கிராம் ஒவ்வொரு கிலோகிராமுக்கும் வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமாகச் செல்கின்றது. அவ்வியாபாரி விற்பனை செய்யும் அரிசியில் நுகர்வோருக்கு மேலதிகமாக செல்லும் அரிசியின் நிறை யாது ?

(1) 110 கிராம் (2) 100 கிராம் (3) 90 கிராம்

30. அரீஸ் தினமும் முச்சக்கர வண்டியில் பணயம் செய்து பாடசாலைக்கு வருகை தருவான். இன்று அவன் முச்சக்கர வண்டியில் வரவில்லை. இருப்பினும் பாடசாலைக்கு அரீஸ் வருகைதந்திருந்தான். அரீஸின் பயணம் பற்றி சரியான முடிவு யாது?


(1) பேருந்தில் அல்லது காரில் பாடசாலைக்கு வந்திருப்பான்.
(2) வேனில் அல்லது துவிச்சக்கர வண்டியில் வந்திருப்பான்.
(3) முச்சக்கர வண்டி அல்லாத வாகனத்தில் வந்திருப்பான்.

31. 

உருவில் காட்டப்பட்டுள்ளவாறு X, Y, Z என்னும் மூன்று ஒத்த பாத்திரங்களில் பால் உள்ளது. இவற்றில் X இலும் பார்க்க Y இல் கூடுதலாக உள்ள பாலின் அளவும் Y இலும் பார்க்க Z இல் கூடுதலாக உள்ள பாலின் அளவும் சமம். X இல் உள்ள பாலின் அளவினதும் Z இல் உள்ள பாலின் அளவினதும் மொத்தம் Y இல் உள்ள பாலின் அளவின் இரு மடங்கிற்கு

(1) கூடியதாகும் (2) சமமாகும் (3) குறைவாகும்

32. அருகில் தரப்பட்டுள்ள ஒரு பெட்டியின் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை 100 ஆகும். இரு பெட்டிகளும் இணைந்திருக்கும் பக்கங்களின் கூட்டுத்தொகை 99 ஆகும் எனின், அம்புக்குறி காட்டப்பட்டுள்ள திசைவழிய காணப்படும் எண் யாது ?



(1) 65 (2) 63 (3) 64

33. பாடசாலை நிகழ்வொன்றில் இருக்கைகள் 401 தொடக்கம் 600 வரைக்கும் இலக்கமிடப்பட்டுள்ளன. அவற்றுள் 4, 6 ஆகிய இலக்கங்கள் அடுத்தடுத்து இடப்பட்டிருக்கும் எத்தனை ஆசனங்கள் உள்ளன?

(1) 12 (2) 13 (3) 11

[பக் 8 ஐப் பார்க்க

www.ikeduk

34. ஒரு போட்டிக்காக தரம் 5 மாணவர்களை ஒழுங்குபடுத்தும் போது தரணி வரிசையொன்றில் 15 ஆவது இடத்தில் இருந்ததோடு வரிசையில் மத்தியிலும் இருக்கின்றார். 17 ஆவது இடத்தில் இருக்கும் றபியாவை வரிசையில் மத்தியில் அமர்த்துவதற்கு செய்ய வேண்டிய மாற்றங்களை சரியாக கூறும் விடையைத் தெரிவுசெய்க.

(1) வரிசையின் இறுதியில் ஒருவரை அமர்த்துதல்.
(2) ஆரம்பத்திலும் இறுதியிலும் இரண்டு பிள்ளைகளை அமர்த்துதல்.
(3) ஆரம்பத்திலிருக்கும் இருவரை வரிசையின இறுதியில் அமர்த்துதல்.

35. அருகில் தரப்பட்டுள்ள நான்கிலக்க எண்ணில் 8 ஆல் வகுபடும் மிகச் சிறிய எண் இடம்பெற வேண்டுமாயின் **B** , **A** ஆகியவற்றுக்கு மிகப் பொருத்தமான எண்கள் முறையே,

7	**A**	**1**	**B**

(1) 2 , 6 (2) 6 , 0 (3) 1 , 0

36. தினகரன், தினத்தந்தி, வீரகேசரி, விடிவெள்ளி, தினமின என்ற ஐந்து பத்திரிகைகளில் விகாஸ் இரண்டு பத்திரிகைகளை வாசிக்கவில்லை. அகாஸ் மட்டும் தினகரன் பத்திரிகையை வாசித்துள்ளார். அகாஸைப் போல விகாஸும் தினத்தந்தி, வீரகேசரி என்ற பத்திரிகைகளை வாசித்துள்ளார். இதற்கேற்ப விகாஸ் நிச்சியமாக
(1) தினகரன், விடிவெள்ளி என்ற இரண்டு பத்திரிகைகளையும்வாசிக்கவில்லை.
(2) தினகரன், தினமின என்ற இரண்டு பத்திரிகைகளையும் வாசிக்கவில்லை.
(3) விடிவெள்ளி, தினமின என்ற இரண்டு பத்திரிகைகளில் ஒன்றை வாசிக்கவில்லை.

37. சாந்தி ஒரு குறித்த ஆண்டில் ஜனவரி மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில் பிறந்தாள். ஸைனப் அதே ஆண்டில் பெப்ரவரி மாதத்தின் முதலாம் வெள்ளிக்கிழமையில் பிறந்தாள். இவ்விரு நாட்களையும் குறிக்கும் எண்களின் மொத்தம் 32 ஆகும். சாந்தி பிறந்த தினம்
(1) 28ஆம் திகதி. (2) 29ஆம் திகதி (3) 30ஆம் திகதி

38. தர்சன் தனக்கு இலவசமாகக் கிடைத்த பலாப்பழங்களை ஒரு சாக்கு மூட்டையில் 20 பலாப்பழங்கள் கொண்ட இரண்டு சாக்கு மூட்டைகளில் வைத்திருந்தான். அவனது வீடு 20கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. அதை தனது வீட்டுக்கு கொண்டு செல்வதற்காக ஒரு வண்டி உரிமையாளருடன் பேசினான். அவர் பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்ப கூலி தரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

- ஒவ்வொரு சாக்கு மூடைகளிலிருந்தும் ஒரு பலாப்பழம் வீதம் ஒவ்வொரு கிலோமீற்றர் தூரத்துக்கும் ஒன்று தரவேண்டும்.
- ஒரு கிலோமீற்றர் முடிந்ததும் கூலி தரவேண்டும்.


இந் நிபந்தனைக்கு அமைவாக கூலி கொடுக்கப்படினும் மீதப்படுத்தி சில பலாப்பழங்களை அவன் வீடு கொண்டு சென்றான். அவை எத்தனை பலாப்பழங்கள்

(1) 15 (2) 10 (3) 20

39. ஒரு குறித்த குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் காணப்படுகின்றனர். அதில் மூத்த பிள்ளை பெண் பிள்ளையாகும். அவளுக்கு சம எண்ணிக்கையில் தம்பியும் தங்கையும் உள்ளனர். இக்குடும்பத்தின் இரண்டாவது பிள்ளைக்கு இரு தங்கையும் ஒரு தம்பியும் உள்ளனர். இரண்டாவது பிள்ளை பற்றிய சரியான கூற்று யாது?

(1) கூறமுடியாது (2) ஆண்பிள்ளை (3) பெண்பிள்ளை

40.



அருகில் விரிக்கப்பட்ட அட்டையை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள சதுரமுகி தரப்பட்டுள்ளது. இச் சதுரமுகி இருந்த இடத்தில் இருக்கத்தக்கதாக இடது பக்கமாகத் திருப்பப்படுகின்றது. ஒரு தடவை திருப்புவது என்பது அருகிலுள்ள அடுத்த பக்கம் வருவதாகும். இவ்வாறு 18 தடவைகள் இச் சதுரமுகி திருப்பப்படின் **C** எழுத்து உள்ள இடத்தில் வரும் எழுத்தைத் தெரிவு செய்க.

(1) **F** (2) **E** (3) **A**

www.ikeet.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

கலாப அத்யாபன கார்யாலய, සමන්තුරේ
வலயக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
Zonal Education Office, Sammanthurai

5

DIAGNOSTIC TEST FOR GRADE FIVE STUDENTS FOR ASSESSING THE STUDENTS' LEARNING ABILITIES - 2024
மாணவர்கள் கற்கும் திறனை மதிப்பீடு செய்வதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும்
ஆய்ந்தறி மதிப்பீடு - 2024

2

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- முன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரியவிடைகளை
- இவ்வினாத்தாளிலேயே எழுதுக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடையின்கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது கோட்டினை மாத்திரம் இடுக
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களில் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டதத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகள் உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

[பக் 2 ஐப் பார்க்க


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945
தமிழ் இலக்கிய நயம்
(Tamil Lit)
1000/-
ரி.காயத்திரி
1000/-
தரம் 10
தரம் 11
திங்கள்: 9 PM
புதன்: 8 PM
ஞாயிறு: 7 PM
வியாழன்: 7 PM
COMMERCIAL BANK
BOC
PEOPLE'S BANK
eZ Cash
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670
0766674945


English
Literature
zoom
76667-4945
MONTHLY
3,000/-
Grade 10
Tue
6PM - 8PM
Sat
6PM-7PM
Grade 11
Wed
6PM - 8PM
Sun
6PM-7PM
By: G.Gnanalosan
COMMERCIAL BANK
BOC
PEOPLE'S BANK
eZ Cash
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670
0766674945


வணிக கல்வியும் கணக்கீடும்
zoom
Call or WhatsApp: 766674945
ஆசிரியர்
மதன்
தரம் 10
தரம் 11
புதன்: 7PM
சனி: 7PM
மாதம் 1000 /-
திங்: 8PM
லியா: 8PM
மாதம் 1000 /-
COMMERCIAL BANK
BOC
PEOPLE'S BANK
eZ Cash
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670
0766674945


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945
மாதம்
GRADE 6-9:800/-
GRADE 10&11:1000/-
ICT
BY
S.MURALI
தமிழ் மீடியம்
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
ENGLISH MEDIUM
GRADE 6
TO
GRADE 11
COMMERCIAL BANK
BOC
PEOPLE'S BANK
eZ Cash
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670
0766674945

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

அயல்நாட்டு அரசன் பெரும்படையுடன் வரப்போகிறான் என்பதை அறிந்த அரசர் மிகவும் கவலையடைந்தார். அந்தப் படையெடுப்பை எவ்வாறு எதிர்கொள்வதென்று தனது படைத் தளபதியுடன் தீவிர ஆலோசனை செய்தார். படைத் தளபதி, அரசே எம்மிடம் படைப்பலம் குறைவாக உள்ளது; நாம் வேறு நாட்டு உதவியைத் தேடிக்கொள்ள வேண்டும்; என்று ஆலோசனை சொன்னான். ஆனால் அரசருக்கு அந்த ஆலோசனை பிடிக்கவே இல்லை. மந்திரிமார்களும் வேறு வேறு ஆலோசனைகளை அரசரிடம் சொன்னார்கள். ஆலோசனையில் கலந்து கொண்டவர்கள் யாருமே அரசருக்குப் பிடித்தமான ஆலோசனைகளைச் சொல்லவில்லை. இதனால் அரசர் கவலையடைந்தார். கடைசியில் அந்தரேயின் ஆலோசனையைக் கேட்கலாம்; அவனாலேதான் இந்த நெருக்கடியை தீர்க்க முடியும் என்ற முடிவுக்கு அனைவரும் வந்தனர்.

பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

1. அரசருக்கு ஆலோசனை கூறிய இருவரும் யாவர்?

.....

2. அரசர் மிகவும் கலையடைந்தமைக்குக் காரணம் என்ன?

.....

3. இறுதியாக, யாருடைய ஆலோசனையைக் கேட்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர்?

.....

4. படைத் தளபதி கூறிய ஆலோசனை என்ன?

.....

5. நெருக்கடி என்ற சொல்லின் கருத்து என்ன?

.....

6. இருபால் பொதுப்பெயர் சொற்கள் இரண்டை எழுதுக.

.....

02. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் வாக்கியத்தின் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. கழிவுநீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகுகின்றது. (.....)
2. அந்திவானம் செந்நிறமாக காணப்பட்டது. (.....)
3. நான் நேற்று அப்பாவுடன் சந்தைக்குச் சென்றோம். (.....)
4. இயற்கைப் பானமான இளநீர் அருந்துதல் உடலுக்கு நன்மையைத் தரும் (.....)

03. அ.ிணை, பலவின்பால், பன்மை, படர்க்கை, நிகழ்கால சொல்லை தெரிவு செய்க.

1. ஓடுகின்றனர் 2 விளையாடுன்றது 3. பறக்கின்றன 4. பாடினார்கள்

04. பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் பிழையான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

1. (i) செய்ந்நன்றி (ii) பல்கலைக்கழகம் (iii) சுகயீனம் (iv) கணினிகள்
2. (i) அக்கியம் (ii) கவனயீனம் (iii) நாகரிகம் (iv) காய்ச்சல்

05. (i) "பாரி மன்னன் தேரை வேகமாகச் செலுத்தினான் "

எனும் வாக்கியத்திலுள்ள செயப்படுபொருளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

: .....

(ii) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

நேற்று தொழிலாளர்கள் தோட்டத்தில் வேலை செய்தனர்.

: .....

06. (i) பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும்

: .....

[பக் 3 ஐப் பார்க்க

www.ikedu.lk

சுட்டெண் : .....

07. (i) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

நூலகம் சந்தை வங்கி வாகனம் என்பவற்றுள் பொதுச்சொத்துக்கள் எவை

(ii) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்குக.
வேண்டாம் / நித்திரை / கைப்பேசியைத் / கொள்ளும்போது / அருகில் / தலையணைக்கு / வைக்க

.....

.....

08. பொருத்தமான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(i) கோழி என்பதற்கு பண்ணை போல் குதிரைக்கு :.....

(ii) இல்லம் என்பதற்கு வீடு போல் தொண்மைக்கு :.....

(iii) தென்னை என்பதற்கு குரும்பை போல் பலாவிற்கு :.....


09. அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து இடைவெளியில் வரவேண்டிய சொல்லைதெரிந்து எழுதுக.

(i) மலைநாட்டில் வாழும் மக்கள்.....நிறைந்த சூழலிலேயே வாழ்கின்றனர். (தண்மை / தன்மை)

(ii) பரீட்சைப் புள்ளிகளை ..... த்துக் கொண்டிருந்த ஆசிரியர் எழுந்து நின்றார். (கணி / கனி)

(iii) ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை..... ஆகும். (பதிப்புரை / முன்னுரை)

10. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.



		A		P				



	P			R		

11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) to / market / I / going / am / the :.....

(ii) Please / others / think / about :.....

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

(i) Bicycle ..... (ii) Smile .....

13. "பந்திகாமரய" (පන්ති කාමරය) என்ற சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.


நன்றாக இருக்கிறேன் :.....

[பக் 4 ஐப் பார்க்க

www.lkedu.lk

15. 19901, 19091, 19109 என்ற மூன்று எண்களிலும் சிறிய எண்ணை எழுத்தில் எழுதுக.

: .....

16. 

அடைப்புக்குள் உள்ள எல்லா இலக்கங்களையும் கொண்டு பத்தினிடம், ஆயிரத்தினிடம் ஆகிய இடங்கள் இரண்டிலும் 8 ஐப் பயன்படுத்தி நான்கு இலக்கங்கள் கொண்ட இரு எண்களை எழுதுக.

: ....

17. பின்வரும் எண் கோலத்தை இனங்கண்டு இரண்டு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரண்டு எண்களையும் எழுதுக.


972, 324, 108, 36, ..., ...

18. 'முப்பத்தோராயிரத்து முப்பத்தொன்று' எனும் எண்ணின் எண்குறியை எழுதுக.

: .....

19. மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டி ஒன்றில் சுரேஸ் சேகரித்த சிப்பிகள் 1629 ஆகும். சுஹைப் சேகரித்த சிப்பிகள் சுரேஸ் சேகரித்த சிப்பிகளிலும் பார்க்க 135 இனால் கூடியது. வதனி சேகரித்த சிப்பிகள் சுரேஸ் சேகரித்த சிப்பிகளிலும் பார்க்க 135 இனால் குறைவானது. மூவரும் சேகரித்த சிப்பிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

20. 

உருவில் நிழற்றப்பட்ட பகுதி பூச்சியம் தசம் ஐந்தாக அமைய வேண்டுமெனின் இன்னும் எத்தனை கட்டங்களை நிழற்ற வேண்டும்?

: .....

21. தரம் 5 மாணவர் குழு ஒன்று இரண்டு முகங்கள், இரண்டு வளைந்த விளிம்புகள் கொண்டு காணப்படும் கேத்திர கணித திண்மப் பொருள் ஒன்றைத் தயாரித்தனர். அவர்கள் தயாரித்த திண்மப் பொருளின் பெயர் என்ன?

: .....

22. தகடு ஒன்றிலிருந்து 6 மீற்றர் 96 சென்ரிமீற்றர் நீளமுடைய துண்டை வெட்டி எடுத்த பின்னர், 6 மீற்றர் 6 சென்ரிமீற்றர் நீளமுடைய துண்டு மீதியாக இருந்தது. ஆரம்பத்தில் இருந்த தகட்டுத்துண்டின் நீளம் யாது?


: ..... மீற்றர் ..... சென்ரிமீற்றர்

23. ஸாஹிதா மு.ப. 10.40 இற்குப் பகல் உணவைச் சமைக்கத் தொடங்கினார். அவர் பி.ப. 1.35 இற்கு உணவு சமைப்பதை நிறைவு செய்தார். ஸாஹிதா உணவு சமைப்பதற்குச் செலவிட்ட நேரம் எவ்வளவு?

: .....

24. 719 கொப்பிகளை ஒருவருக்கு ஏழு வீதம் மாணவர்களிடையே பகிர்ந்து கொடுக்கப்பட்டது. மீதியாக உள்ள கொப்பிகளுடன் எத்தனை கொப்பிகளைச் சேர்ப்பதன் மூலம் மேலும் ஒருவருக்கு ஏழு கொப்பிகளை வழங்க முடியும்?

: .....


25. 

கட்டத்தில் உள்ள பந்துகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கை ($\frac{2}{3}$) உரோமன் எண் குறியில் காட்டுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவைப்படும்.

: .....

[பக் 5 ஐப் பார்க்க

www.ikedu.lk

26. 

இலங்கையில் சில நகரங்களுக்கிடையிலான தூரங்கள் காட்டப்பட்டுள்ளன. இதன் படி கொழும்பிலிருந்து புத்தளத்திற்கான தூரம் எவ்வளவு?

: .....

27. பின்வரும் சிட்டையின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	1kg விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
அங்கர்	400g	.....	.....	1000	00
கோதுமை	100g	430	00	.....	.....
			மொத்தம்	1043	00

28. அரீஸ் 4*l* 120m*l* நீரிலிருந்து அரைவாசியை குளிர்பானத் தேவைக்குப் பயன்படுத்திய பின் எஞ்சியுள்ள நீரை 4 போத்தல்களில் சம அளவுகளில் ஊற்றினான் எனின் அவன் ஒரு போத்தலில் ஊற்றிய நீரின் அளவு யாது?

: ..... மில்லிலீற்றர்

29. மதீனா வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பற்றி தகவல் அடங்கிய அட்டவணை தரப்பட்டுள்ளது.

குடும்ப தகவல்கள்	மாணவர்களின் எண்ணிக்கை
சகோதரர்கள் மாத்திரம் உள்ளோர்	///// ///// ////
சகோதரிகள் மாத்திரம் உள்ளோர்	///// ///// ///// /
சகோதர, சகோதரிகள் மாத்திரம் உள்ளோர்	.....
சகோதர, சகோதரிகள் இல்லாதோர்	///// ///

(i) சகோதரிகள் மாத்திரம் உள்ளோரின் மாணவர்களின் எண்ணிக்கை சகோதர, சகோதரிகள் மாத்திரம் உள்ளோரின் மாணவர்களின் எண்ணிக்கையின் நான்கு மடங்காகாகும்.
சகோதர, சகோதரிகள் மாத்திரம் உள்ளோரின் மாணவர்களின் எண்ணிக்கையை அட்டவணையில் உள்ள இடைவெளியில் குறித்துக் காட்டுக.

(ii) மதீனா வித்தியாலயத்தில் தரம் 5 வகுப்பறையில் காணப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

● 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. இரவு வேளையில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
(1) வாழை (2) அகத்தி (3) கத்தரி

31. நாயுருவி, நெருஞ்சி போன்ற தாவர வித்துக்கள் பெருமளவில் பரம்பலடையும் விதம்
(1) காற்றினால் (2) நீரினால் (3) விலங்குகளினால்


32. தேசியக் கொடியில் மஞ்சள் நிற சிங்க உருவம் குறிப்பது?
(1) கொடியின் முழுமைப்பாட்டையும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும்
(2) தமிழ், முஸ்லிம் மறறும் ஏனைய இன மக்களைக் குறிக்கும்
(3) சிங்கள இன மக்களைக் குறிக்கும்

[பக் 6 ஐப் பார்க்க


www.ikeduc.lk

33. சூழலில் ஊன் உண்ணி விலங்குகள் மாத்திரம் காணப்படுமாயின் நிகழக்கூடியவைகளில் ஒன்று
(1) ஊன் உண்ணிகளின் எண்ணிக்கை குறைந்து அவை உணவின்றி இறக்க நேரிடும்
(2) இலையுண்ணிகளின் எண்ணிக்கை அதிகமாகி தாவரங்களின் எண்ணிக்கை குறைந்து விடும்
(3) தாவர உண்ணிகளின் அழிவினால் ஊன் உண்ணிகள் உணவின்றி இறக்க நேரிடும்

34. வேலைகளை இலகுவாக்கும் எளிய பொறியான கத்தரிக்கோலின் வரிப்படம் காட்டப்பட்டுள்ளது. இதில் விசை பிரயோகிக்கப்படும் இடங்கள் எவை?
(1) A, B ஆகிய இடங்களில்
(2) A, C ஆகிய இடங்களில்
(3) B, C ஆகிய இடங்களில்



35. இலங்கை மாகாணங்களைக் காட்டும் தேசப்படம் காட்டப்பட்டுள்ளது. இதில் A, B குறிக்கும் மாகாணத்தில் அமையப்பெற்ற இலங்கையில் பழைமை வாய்ந்த இடங்கள் முறையே,
(1) பெருக்க மரம் , ரிட்டிகல - கந்தை(மலை)
(2) யாப்பகுவ கோட்டை , இரணைமடுக் குளம்
(3) கதிர்காமம் , சிகிரியா



36. பாடசாலை விட்டு வரும் வழியில் உனது நண்பனுக்கு விசர்நாய் கடித்துவிட்டது. பாதிக்கப்பட்ட மாணவனுக்கு நீங்கள் முதலில் செய்யக்கூடிய முதலுதவி என்ன?
(1) கடிவாயைச் சுற்றி கற்றாளை சாற்றை பிழிந்து பூசுதல்
(2) கடிவாயைச் சவர்க்காரமிட்டு சுத்தமான ஓடும் நீரினால் கழுவுதல்
(3) கடிவாயில் கூடாக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்யைப் பூசுதல்

37. பௌத்தர்களின் நீருடன் தொடர்புடைய வழக்காறுகளில் ஒன்றாக அமையாத அம்சம்
(1) தோசம் நீக்கிக் கொள்வதற்காக பிரித் ஓதிய நீர் தெளித்தல்.
(2) புதுவருடத்தில் மருத்துநீர் வைத்து நீராடுதல்.
(3) நற்காரியங்களுக்குச் செல்லும் போது நீர் நீரம்பிய பாத்திரமொன்றை கையில் ஏந்திய வண்ணம் பெண் ஒருவர் முன்னே வருதல்.

38. பின்வரும் உயிரினங்களில் பூச்சியினத்தைச் சேராத பிராணி எது?
(1) 
(2) 
(3) 


39. ரெஜிபோம் துண்டொன்றின் மீது சட்டக்காந்தமொன்றினை வைத்து நீர்ப்பாத்திரமொன்றினுள் மிதக்கவிடப்பட்டுள்ளது. சிறிது நேரத்தில் உமது அவதானம் என்ன?
(1) காந்தம் நீருக்குள் அமிழ்ந்துவிடும்
(2) காந்தத்தின் வடமுனை(சிவப்பு) வடக்கு திசையைக் காட்டும்
(3) ரெஜிபோம் நீருக்குள் அங்குமிங்கும் அசைந்த வண்ணம் காணப்படும்.

40. சில்லும் அச்சாணியும் பயன்படுத்தி வேலையை இலகுவாக்கும் சந்தர்ப்பம் அல்லாதது?
(1) துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்தல்
(2) பாடசாலை ஏணிப் படியில் ஏறுதல்
(3) திருகாணி செலுத்தியால் திருகாணி செலுத்துதல்

41. கீழே தரப்பட்டுள்ள வரிப்படமானது, தேசப்படமொன்றில் வீதிகளை இனங்காண்பதற்கு பிரயோகிக்கப்படும் குறியீடாகும். இது தொடர்பான சரியான கூற்று?
(1) பெருந்தெரு - சிவப்பு நிறம்
(2) புகையிரதம் - கறுப்பு நிறம்
(3) அதிவேகப் பாதை - ஊதா நிறம்

[பக் 7 ஐப் பார்க்க

42. நீரைக் கொண்டுள்ள கண்ணாடிக் குவளையில் சிறிதளவு தேங்காயெண்ணெய், சிறிதளவு மண்ணெண்ணெய் என்பவற்றை இட்டுச் சிறிது நேரத்தில் பின்னர் அவதானிக்கக்கூடியது



(1) (2) (3)

43. மலையக பிரதேச மக்கள் தொண்டைக் கழலை நோயால் அதிகம் பாதிக்கப்படுவது
(1) மலையக பிரதேசம் அதிக குளிராக இருப்பதால்
(2) மலையக பிரதேசத்தில் கடல் உணவுகள் போதியளவு கிடைக்காமையால்
(3) மலையக பிரதேசம் மக்கள் போதியவு உடற்பயிற்சி செய்ய முடியாமையால்

44. கரும் பச்சை நிற இலைவகைகளான பசளி, முளைக்கீரை தொடர்பாக சரியான கூற்று.
(1) விற்றமின் A, விற்றமின் B என்பன காணப்படும் உணவு வகையாகும்.
(2) இவை அதிக காபோவைதரேற்று கொண்ட உணவுகளாக காணப்படுகின்றன
(3) உடல் வளர்ச்சிக்கு தேவையான அதிக புரதம் கொணட உணவு வகையாகும்.

45. பருவகாலச் சீட்டை வழங்கும் சேவை நிலையம் யாது?
(1) பிரதேசசெயலாளர் அலுவலகம் (2) அஞ்சல் அலுவலகம்
(3) இலங்கை போக்குவரத்துச் சபை

46. வெளிநாட்டில் வசிக்கும் உமது நண்பன் சீகிரிய ஓவியங்களின் படம் ஒன்றை இயன்ற வரை துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?
(1) விமானத் தபால் (2) கடுகதித்தபால் (3) மின்னஞ்சல்

47. "இலங்கை கட்டளைகள் பணியகம்" என்பதற்கு பயன்படுத்தப்படும் குறியீடு எது?


(1)  (2)  (3) 

48. பூ முனைத் திருப்புளி என்பது,
(1) சில வகையான ஆணிகளை கழற்றுவதற்கும் பூட்டுவதற்கும் பயன்படும் கருவியாகும்.
(2) கலக்கிப் பொறியில் பொருத்தப்பட்டுள்ள பூ வடிய வெட்டும் தகடாகும்.
(3) தேங்காய் துருவுவதற்காக துருவலையில் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லாகும்

49. வீட்டுத்தோட்டச் செய்கையில் பழைய கலன் ஒன்றைப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தும் முறை தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் சரியான **3R** எண்ணக்கரு யாது ?
(1) பயன்பாட்டைக் குறைத்தல் (2) மீளப்பயன்படுத்தல் (3) மீள்சுழற்சிக்குட்படுத்தல்

50. 'நீங்கள் குப்பைகளை எரிப்பதாலும் நிலத்தில் வெந்நீர் கொட்டுவதாலும் நானும் எனது குஞ்சுகளும் இறந்து விடுவோம். நாங்கள் இறந்துவிட்டால் உங்களது தோட்டத்திலுள்ள குப்பைகளைப் பசளையாக மாற்றித் தருபவர் யார்?' எனக் கூறும் பிராணியைத் தெரிவு செய்க.
(1) வெட்டுக்கிளி (2) மட்டைத்தேள் (3) மண்புழு

51. உலர் மின்கலங்களுடன் இணைக்கும் கம்பிகளினால் மின்குமிழ்கள் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இதில் ஒளிரும் சுற்று எது?

(1)  (2)  (3) 

[பக் 8 ஐப் பார்க்க

www.ikedu.lk


52. அளுத்கமை, கம்பளை, புத்தளம், மாத்தளை ஆகிய நகரங்களில் ஸாஹிராக் கல்லூரிகளையும் அளுத்கமை, அட்டாளைச்சேனை ஆகிய நகரங்களில் ஆசிரியர்பயிற்சிக் கலாசாலைகளையும் ஆரம்பித்தவர் யார்?
(1) கலாநிதி ரீ.பீ. ஜாயா (2) சேர்.டீ.பி.ஜயத்திலக்க (3) C.W.W.கன்னங்கரா

53. 
படத்தில் காட்டப்படுள்ள குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?
(1) மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கண்ணாடி
(2) மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள்
(3) இங்கே உக்கலடையாத கழிவுப் பொருட்களைப் போடவும்

54. சூரிய நமஸ்காரத்தின் செயற்பாட்டில் மூன்றாவது சந்தர்ப்பத்தைக் காட்டும் உரு
(1)  (2)  (3) 

55. நீர்வடிகட்டியினுள் கரித்துண்டு இடுவதற்கான காரணம் யாது?
(1) நீரைத் தெளியவைக்க (2) நச்சுவாயுக்களை அகற்ற (3) வடிகட்ட

56. காந்தத்தைப் பயன்படுத்தி அசையும் காகித வண்ணத்துப் பூச்சி ஆக்கம் காட்டப்பட்டுள்ளது. இதில் வண்ணத்துப்பூச்சியை தாங்கி நிற்கும் நூல் அறுந்துவிடுமானால் உமது அவதானம்
(1) வண்ணத்துப் பூச்சி காந்தத்துடன் ஒட்டிக்கொள்ளும்
(2) வண்ணத்துப் பூச்சி அசைந்த வண்ணம் கீழே விழுந்துவிடும்
(3) வண்ணத்துப் பூச்சி காற்றில் மிதந்த வண்ணம் காணப்படும்



57. கைராட்டினம் பயன்படுத்தப்படுவது
(1) வயல் வேலைகளுக்கு (2) மட்பாண்ட லைகளுக்கு (3) ஆடைத் தொழிலுக்கு

58. இலங்கைக்கே உரித்தான தாவரம், முலையூட்டி, மீன், நகருயிர் முறையே,
(1) எண்ணை, கலவத்தன், புலத்ஹயா, நீர்ப்பாம்பு
(2) கெக்கட்டியா, மள்புளுட்டா, கருங்குரங்கு, கொம்பு ஓணான்
(3) ஹீன்போவிட்டியா, சபன், சுண்டெலி, கொடபறை

59. உலக கைகழுவும் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
(1) ஒக்டோபர் 15 (2) மார்ச் 22 (3) பெப்ரவரி 14

60. நம் வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், வீடுகள் என்பன எப்போதும் சுத்தம் பேணப்பட வேண்டிய இடங்களாகும். இவை சார்ந்த சூழல் சுத்தம் பேணப்படாவிட்டால், நுளம்புகள் பெருகி பல நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும். இவற்றிலிருந்து எம்மையும் எம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாப்பது எமது பொறுப்பாகும். "சுத்தமான சூழலை உருவாக்குவோம்" என்பதை அடிப்படையாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பும் எழுத்துக்கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1 .....

.....

2 .....

.....

3 .....

.....

www.lkedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

කලාප අධ්‍යාපන කාර්යාලය, සමන්තුරේ
வலயக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
Zonal Education Office, Sammanthurai

தரம் 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை - 2024

புள்ளித்திட்டம்

வினாத்தாள்-I

(01)	1	(06)	3	(11)	2	(16)	2	(21)	1	(26)	3	(31)	2	(36)	3
(02)	2	(07)	1	(12)	1	(17)	3	(22)	3	(27)	1	(32)	1	(37)	1
(03)	3	(08)	1	(13)	3	(18)	2	(23)	1	(28)	3	(33)	2	(38)	2
(04)	2	(09)	2	(14)	2	(19)	1	(24)	2	(29)	3	(34)	3	(39)	2
(05)	3	(10)	1	(15)	1	(20)	3	(25)	2	(30)	3	(35)	2	(40)	1

40 x 2.5 = 100 புள்ளிகள்

வினாத்தாள்-II

01.	1.	படைத்தளபதி , மந்திரிமார்கள்	புள்ளி-1
	2.	அயல் நாட்டு அரசன் பெரும் படையுடன் வரப்போகிறான் என்பதால்	புள்ளி-1
	3.	அந்தரேயின்	புள்ளி-1
	4.	வேறு நாட்டு உதவியைத் தேடிக்கொள்ள வேண்டும் என	புள்ளி-1
	5.	பிரச்சினை/சிக்கல்	புள்ளி-1
	6.	மந்திரி, தளபதி	புள்ளி-1
02.	1.	பிழை	புள்ளி-1
	2.	சரி	புள்ளி-1
	3.	பிழை	புள்ளி-1
	4.	சரி	புள்ளி-1
03.	3.	பற்க்கின்றன	புள்ளி-1
04.	1.	(iii) சுகயீனம்	புள்ளி-1
	2.	(i) அக்கியம்	புள்ளி-1
05.	(i) தேர்		புள்ளி-1
	(ii) நாளை தொழிலாளர்கள் தோட்டத்தில் வேலை செய்வர்		புள்ளி-1
06.	(i) மானத்துடன் வாழவேண்டும்		புள்ளி-1
07.	(i) நூலகம், சந்தை, வங்கி, வாகனம் என்பவற்றுள் பொதுச்சொத்துக்கள் எவை?		புள்ளி-1
	(ii) நித்திரை கொள்ளும் போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்		புள்ளி-1
08.	(i) லாயம்		புள்ளி-1
	(ii) பழைமை		புள்ளி-1
	(iii) முசு		புள்ளி-1
09.	(i) தண்மை		புள்ளி-1
	(ii) கணி		புள்ளி-1
	(iii) பதிப்புரை		புள்ளி-1

www.lkedu.lk

10. (i) | S | H | A | R | P | E | N | E | R | புள்ளி-1

(ii) | S | P | A | R | R | O | W | புள்ளி-1

11. (i) I am going to the market (ii) Please think about others புள்ளி-2

12. (i) துவிச்சக்கரவண்டி (ii) சிரிப்பு/புன்னகை புள்ளி-2

13. வகுப்பறை புள்ளி-1

14. ஹொந்தின் இன்னவா புள்ளி-1

15. பத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்று புள்ளி-2

16. 8084, 8480 புள்ளி-2

17. 12, 4 புள்ளி-2

18. 31031 புள்ளி-2

19. 4887 புள்ளி-2

20. 2 கட்டங்கள் புள்ளி-2

21. உருளை புள்ளி-2

22. 13மீற்றர் 02 சென்ரிமீற்றர் புள்ளி-2

23. 2 மணித்தியாலமும் 55 நிமிடங்களும் புள்ளி-2

24. 2 புள்ளி-2

25. 7 புள்ளி-2

26. 191km புள்ளி-2

27. 2500.00 43.00 புள்ளி-2

28. 515 மில்லிமீற்றர் புள்ளி-2

29. (i) //// புள்ளி-2

(ii) **42** புள்ளி-2

30. 2	37. 2	44. 1	51. 1	58. 1
31. 3	38. 3	45. 3	52. 1	59. 1
32. 3	39. 2	46. 3	53. 1	
33. 1	40. 2	47. 1	54. 3	
34. 3	41. 1	48. 1	55. 2	
35. 1	42. 2	49. 2	56. 1	
36. 2	43. 2	50. 3	57. 3	

புள்ளி-30

01 - 14	- 32 புள்ளிகள்
15 - 29	- 32 புள்ளிகள்
30 - 59	- 30 புள்ளிகள்
60	- 06 புள்ளிகள்
மொத்தப் புள்ளிகள்	-100 புள்ளிகள்

www.lkedu.lk